வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 11.02.2026 புதன்கிழமை | இதழ் : 42 | பக்கங்கள் : 08

# பொலிஸ் துப்பாக்கிச்சூடு; 17 வயது சிறுவன் மரணம்

## அல்லைப்பிட்டியில் நேற்று அதிகாலை பயங்கரம்

இ.ராஜ்குமார், த.பிரதீபன்
யாழ்ப்பாணம், பெப்ரவரி. 11

**நிறுத்துமாறு விடுத்த உத்தரவை மீறிப் பயணித்த ஹைஏஸ் வான்மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 வயது சிறுவன் ஒருவர் பலியானார். அந்த வாகனத்தில் இருந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.**


*நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக நேற்று அதிகாலை 5.30 மணிக்கு பொலிஸ் ஊடகப் பிரிவு*

07









## நெற்றி வழியாகவே மூளையை துளைத்தது துப்பாக்கி தோட்டா

### உடற்கூராய்வு அறிக்கை

*யாழ்ப்பாணம், பெப். 11*

*உயிரிழந்த சிறுவனின் நெற்றி வழியாக தலைக்குள் ஊடுருவிய தோட்டா மூளையை துளைத்ததால் மரணம் சம்பவித்தது - இவ்வாறு நேற்றைய தினம் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிறுவனின் உடற்கூராய்வு பரிசோதனை*

07

## அறிவுவெட்டவே ஆட்களை அழைத்துச் சென்றிருந்தார்!

### பலியானவரின் சிறியதாய்

*யாழ்ப்பாணம், பெப். 11*

*"வயலில் அறிவுவெட்டுக்கு வேலையாட்களை அழைத்துச் சென்றவர்மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டது", என்று உயிரிழந்த சிறுவனின் சிறிய தாயார் தெரிவித்துள்ளார்.*

*நேற்றைய தினம் பொலிஸாரின்*

07

## அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூடு; விசாரணைகள் நடைபெறுகின்றன

### அரசாங்கம் அறிவிப்பு



*கொழும்பு, பெப். 11*

*"அல்லைப்பிட்டியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன", என்று அமைச்சரவை*

07

## ஊழலற்ற நாடுகள்: இலங்கை முன்னேற்றம்

*கொழும்பு, பெப். 11*

*ஊழல் குறிகாட்டியில் இலங்கை முன்னேற்றம் அடைந்துள்ளது. 2025ஆம் ஆண்டில் 14 இடங்கள் மேலேறி 107ஆவது இடத்தைப் பிடித்துள்ளது என்று ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.*

*ஊழல் குறிகாட்டி சுட்டெண்ணில் 2024ஆம் ஆண்டில் இலங்கை 121ஆவது இடத்தில் இருந்தது.*

07

## புலிகளின் தலைவர் பிரபாகரனின் வீடு அருங்காட்சியமாக மாற்றப்படும்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், பெப். 11*

*"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வல்வெட்டித்துறையில் 15 வயது வரை வாழ்ந்த வீட்டை அருங்காட்சியகமாக மாற்ற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்", என்று வல்வெட்டித்துறை நகர பிதா எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.*

*நேற்றைய தினம் வல்வெட்டித்துறையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.*

*இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,*

*"தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டினை பார்வையிட ஆயிரக்கணக்கில் படையெடுத்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள*

07

## பணம் இருக்கும் மூவினத்தவரும் நாட்டில் சந்தோசமாக உள்ளனர்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்கா கூறுகிறார்

- படையினரின் சம்மதத்துடன் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும்
- தெற்கில் இனவாதம் இல்லாவிடின் வடக்கிலும் இருக்காது
- தமிழ்அரசு, ஐக்கிய மக்கள் சக்தியினர் பள்ளிக்கூடம் செல்லவில்லையா?

குமார. கோகுலன்
*வவுனியா, பெப். 11*

*"பல வருட காலமாக இந்த நாட்டிலே பிரச்னை ஒன்று உள்ளது என்று எங்களுக்கு தெரியும். அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. பெரும்பாலான பிரச்னைகள் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற ரீதியில் இல்லை. பணம் இருக்கும் மூவினத்தவர்களும் சந்தோசமாக உள்ளனர். பணம் இல்லையெனின் இது கஷ்டம்" - இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா.*

*நேற்றைய தினம் வவுனியா - கூமாங்குளம் - அலகரை வீதியின் திருத்தப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அங்கு அவர்*

07

## கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் இனவாத நோக்கம் கிடையாது

### அரசாங்கம் சொல்கிறது

*கொழும்பு, பெப். 11*

*"கிவுல் ஓயா திட்டத்தின் கீழ் எந்தவோர் இனவாத நோக்கமும் அரசாங்கத்துக்கு இல்லை. முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட மக்களின் நீர் பிரச்னையின் அத்தியாவசியத் தேவையை உணர்ந்து, 6 மடங்கு செலவு அதிகரிப்பில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படுகிறது. எனவே, இதனை அரசியல் மயப்படுத்த வேண்டாம்", என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ*

07

## 10 கோடி டொலர் செலவில் வட, கிழக்கில் அபிவிருத்தி

*கொழும்பு, பெப். 11*

*வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்காக 10 கோடி டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.*

*2026 தொடக்கம் 2031 வரையான 6 ஆண்டு காலப் பகுதிக்கு உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தால் 100 கோடி*

07

## துப்பாக்கியுடன் சந்தைக்கு வந்த நபரால் பரபரப்பு

*யாழ்ப்பாணம், பெப். 11*

*மருதனார்மடம் சந்தைக்கு துப்பாக்கியுடன் வந்த நபரால் நேற்றைய தினம் பரபரப்பு ஏற்பட்டது.*

07





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் உப பணிமனை மூடப்பட்டது

# நல்லூர் பிரதேச சபையின் தலைமை பணிமனையிலேயே இனி சேவைகள்

யாழ்ப்பாணம், பெப். 11

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப பணிமனை சபையின் தலைமை பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் ப. மயூரன் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளணிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு அலைச்சலற்ற - வினைத்திறனான சேவையை ஒரே இடத்தில் வழங்கும் நோக்கிலேயே இந்த இணைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, நல்லூர் உப பணிமனையின் பணிகள் அனைத்தையும் இனி நல்லூர் பிரதேச சபையின் தலைமை பணிமனையில் மக்கள் பெறமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-05)

# யாழ். பல்கலைக்கழகத்தின் முல்லை காணியில் அபிவிருத்தி

ஆளுநருடனான கூட்டத்தில் இணக்கம்

யாழ்ப்பாணம், பெப். 11

முல்லைத்தீவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்தி பணிகளைப் படிப்படியாக ஆரம்பிப்பதற்கும் காணி ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் எல்லைகளை இட்டு வேலி அமைப்பதற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயத்துக்கு அமைவாக, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

கடந்த 27.01.2026 அன்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்தி பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் இதனால் அக்காணியைத் தனிநபர்கள் ஆக்கிரமிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆராய்ந்து உடனடித் தீர்வு காண்பதற்காக ஆளுநர் தலைமையில் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு கருத்து வெளியிட்ட பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா, "முல்லைத்தீவில் எமக்கு ஒதுக்கப்பட்ட காணியில் செயற்பாடுகளை ஆரம்பிக்க நாம் தயாராகவே உள்ளோம். எனினும், போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்மை காரணமாகவே தாமதம் ஏற்பட்டது - என்றார்.

இதற்குத் தீர்வாக, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பல்கலைக்கழகத்தின் ஆரம்பகட்ட கட்டுமானப் பணிகளுக்காக ஒரு தொகுதி நிதியை வழங்குவதற்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் இதன்போது உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட 44 ஏக்கர் காணிக்குரிய எல்லைகளை உடனடியாக அளவீடு செய்து, வேலி அமைக்கும் பணிகளை பல்கலைக்கழக நிர்வாகம் விரைவில் ஆரம்பிக்கும் எனத் துணைவேந்தர் உறுதியளித்தார்.

வேலி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட செயலகம் வழங்கும் நிதி உதவியுடன் படிப்படியாகக் கட்டட நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ)

# பனைசார் உற்பத்திகளின் அபிவிருத்தி; பிரதி அமைச்சர் பிரதீப் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பெருந்தோட்டம், சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பனை மற்றும் பனைசார் உற்பத்தி கைத்தொழிலில் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்தார்.

அந்தத் துறைசார் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், கைத்தொழிலாளர்களை சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரதி அமைச்சர் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள பனை கூட்டுறவு சங்கங்களின் பணிமனைகளுக்கும் கைத்தொழில் நிலையங்களுக்கும் களப்பயணம் செய்னார்.

இதன்போது, உற்பத்தியாளர்கள், கைத்தொழிலாளர்களின் கருத்துகளை கேட்டறிந்தார். அத்துடன், இந்தத் துறையை மென்மேலும் விருத்தி செய்ய மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக பனை அபிவிருத்தி சபையின் தலைவருக்கு ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

இதன்போது, ஆளும் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா, வடக்கு மாகாண கூட்டுறவு சங்க ஊழியர் ஆணைக்குழுவின் புதிய தலைவர் பிரகாஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

(ஐ)



## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப். 11

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்று புதன்கிழமை மதியம் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி. நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கல்வி பணிமனையின் ஆலோசகர் (வரலாறு) எஸ். பாஸ்கரன் பிரதம விருந்தினராகவும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் போஷகர் ரி. கிருஷ்ணகுமார் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# 300 கிலோ பீடி இலைகள் கடற்படையிடம் சிக்கியது

கொழும்பு, பெப். 11

மாரவில கடற் பகுதியில் சுமார் 300 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன கடற்படை தெரிவித்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படை படகு ஒன்று மாரவில கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான சாக்கு மூடைகளை கண்டுபிடித்துள்ளது.

அந்தப் பகுதியில் கடற்படை கண்காணிப்பு அதிகரித்ததால் கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் குறித்த இலைகள் அங்கு கைப்பற்றப்பட்டுள்ளன.

அவை, சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுகத்திலுள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணிமனையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# பேரிடர் இடம்பெற்று இரு மாதங்கள் பூர்த்தி; மலையக மக்களுக்கு முன்னுரிமை அவசியம்

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 11

"டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தமானது கட்டமைப்பு ரீதியான இடைவெளிகளையும், சமத்துவமின்மையையும் தோற்றுவித்துள்ளது. ஆகவே மக்களின் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டையும் விரைந்து மேற்கொள்வதுடன், இதன்போது பேரனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டியது மிக அவசியம் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ - பிரான்சே வலியுறுத்தியுள்ளார்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட "தித்வா" சூறாவளியினால் மலையக பகுதிகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த வார இறுதியில் பதுளை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு, அங்கு களநிலைவரங்களைப் பார்வையிட்டதன் பின்னர் வெளியிட்டுள்ள காணொளியிலேயே வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ - பிரான்சே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது: -

"டித்வா" சூறாவளி இலங்கையைத் தாக்கி இரண்டு மாதங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இந்நிலையில் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்காக நான் பதுளை மாவட்டத்துக்கு வருகை தந்திருக்கிறேன். இக்காலப்பகுதியில் அரச அதிகாரிகள் ஆற்றிய அளப்பரிய சேவையையும், இலங்கை முழுவதும் வெளிப்படுத்தப்பட்ட உடன்நிற்பையும் நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். அதுமாத்திரமன்றி பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு அவசியான உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச சமூகமும் உடனடியாக முன்வந்தது.

எது எவ்வாறெனினும் இன்னமும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடியிருப்பு வசதிகள் அவசியமாகவுள்ளன. குறிப்பாக தங்குமிடங்கள், தூய்மையான குடிநீர், வாழ்வாதாரம் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் சார்ந்து நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையிலான தீர்வுகள் வழங்கப்படவேண்டியுள்ளன.

இந்தப் பேரனர்த்தமானது கட்டமைப்பு ரீதியான இடைவெளிகளையும், சமத்துவமின்மையையும் தோற்றுவித்துள்ளது. ஆகவே மக்களின் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டையும் விரைந்து மேற்கொள்வதுடன், இதன்போது பேரனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்றார். (அ)

## ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் க. நாகஜெயகுமாரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். (ஐ)

# டித்வா மீட்புப் பணிகள் நிறுத்தம்!

கொழும்பு, பெப். 11

டித்வா பேரிடரைத் தொடர்ந்து காணாமல் போனதாகக் கூறப்படும் நபர்களைத் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் அதிகாரபூர்வமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பேரிடல் 173 பேரை காணவில்லை என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளி தாக்கி இரண்டு மாதங்களுக்கும் மேலாகிவிட்டதால் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. தற்போதைய நெறிமுறைகளின் கீழ் மேலும் தேடுதல் நடவடிக்கைகள் தேவையற்றவை. எவ்வாறாயினும், டித்வா பேரிடரால் காணாமல்போனவர்கள் இறந்ததாக அறிவிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை 2004 சுனாமிக்கு இணையானது எனவும், சுனாமியின் பின்னர் 5,000 இற்கும் மேற்பட்டோர் இன்றுவரை காணாமல்போனதாக அதிகாரபூர்வமாக பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் நிலவரப்படி, டித்வா சூறாவளியால் உறுதிப்படுத்தப்பட்ட இறப்பு எண்ணிக்கை 650ஆக பதிவாகியுள்ளது. அண்மையில் கூடுதலாக நான்கு இறப்புகள் பதிவாகியுள்ளன. வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தபோது இந்த பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.02.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், தை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்த் தேசிய கட்சிகளின் இயலாமை

"மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்படாமைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு காரணம் - 2017ஆம் ஆண்டு தேர்தல் முறைமையை மாற்றியமைத்து, தேர்தல் தாமதமடைவதற்கு இந்தத் தமிழ்த் தேசிய கட்சிகள் முழுமையான ஆதரவை வழங்கியிருந்தன" - என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

உண்மையை எவர் கூறினாலும் அதனை ஏற்கத்தான் வேண்டும். விஜயதாஸ கூறுவதில் உண்மை உண்டுதான். "தங்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. ஆனால், எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும்" என்னும் அடிப்படையில் சி. வி. விக்னேஸ்வரனை கருத்தில் கொண்டே அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைகள் தேர்தலில் ஆர்வம் காண்பித்திருக்கவில்லை. மேலும், புதிய அரசியல் யாப்பு என்னும் மாயமானுக்கு பின்னால் அலைவதை ஒரு சாதனையாகவும் காண்பித்துக் கொண்டனர். ஆனால், இறுதியில் புதிய அரசியல் யாப்பும் இல்லை, மாகாண சபைகள் தேர்தலும் இல்லை என்னும் கையறு நிலைமையே ஏற்பட்டது. தேசிய மக்கள் சக்தி மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் இருக்கும் நிலையில் - ஒருவேளை நடத்தாமலேயே விட்டாலும்கூட எந்தவோர் அழுத்தத்தையும் பிரயோகிக்கக்கூடிய நிலையில் தற்போதைய தமிழ்த் தேசிய கட்சிகள் என்பவை இல்லை.

தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் குறிப்பாக, அதன் தலைமைக் கட்சியான ஜே. வி. பி.யைப் பொறுத்தவரையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே முரண்பாடான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக இப்போதும் மாகாண சபைகள் முறைமை தோல்வியடைந்த முறைமை என்றே கூறிவருகிறது. ரில்வின் சில்வா இதனை வெளிப்படையாகவே பேசி வருகிறார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜே. வி. பி.யின் தலைவராக அவ்வாறான கருத்தையே கூறிவந்தார். எனினும், ஜனாதிபதியான பின்னர் "ஆம்" என்றும் சொல்வதில்லை "இல்லை" எனவும் சொல்வதில்லை என்பதே அவருடைய நிலைப்பாடாக இருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கே அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் இருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் என்பவை தங்களின் வழமையான பட்டு வேட்டிக் கனவில் தங்களுக்குள் யார் சரியாகக் கனவு காண்பவர்கள் என்பதில் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்தான் ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணத்தை பலரும் உற்று நோக்குகின்றனர்.

ரில்வின் சில்வா இன்றையநிலையில் ஜே. வி. பி.யின் சக்திவாய்ந்த ஒரு குரல் - அவர் அதனை மறுத்தாலும்கூட, அதுதான் உண்மை. இதுவரையில், எந்தவோர் இந்திய ஊடகத்திலும் அவர் பற்றிய செய்திகள் வரவில்லை. அவர் எவருடனும் பேசவில்லை. நாடு திரும்பிய பின்னர் என்ன கூறுவார் என்பதைப் பொறுத்து மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அவர்களுடைய கருத்தை அறியலாம். ஆனால், தற்போதுள்ள சூழலில் இந்த ஆண்டு மாகாண சபைகள் தேர்தல் நடத்துவது இலகுவானதாக இருக்க வாய்ப்பில்லை. மேலும், இந்தியா கடுமையான அழுத்தங்களை வழங்கும் என்று எதிர்பார்த்தால் அதுவும் தவறானது. தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதான பெருமெடுப்பிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை நாடு தழுவிய நிலையில் முன்னெடுத்தால் அப்போது புதுடில்லி சற்று திரும்பிப் பார்க்கக்கூடும் - அவ்வாறில்லாதுவிட்டால் வழமையான உதட்டளவிலான பேச்சுடன் விடயம் முடிந்துவிடும்.

# சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டியது இல்லை!

### தேசிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, பெப். 11

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் தமக்கு எதிராக முறைப்பாடு செய் யப்பட்டுள்ளபோதிலும், சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தனது பதவியிலிருந்து விலக வேண்டிய அவசியம் இல்லையென தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் கலாநிதி நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக அவரை பதவியிறங்குமாறு எதிர்க்கட்சிகள் விடுத்து வரும் கோரிக்கைகள் குறித்து ஆளுங்கட்சியின் பாராளுமன்றக் குழு கலந்துரையாடியதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேறு எவராவது அத்தகைய விசாரணைகளுக்காகத் தனது பதவியை விட்டு விலகியுள்ளனரா எனக் கேள்வி எழுப்பிய அவர், ஆணைக்குழு தனது விசாரணைகளை எவ்வித இடையூறுமின்றித் தாராளமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் வலியுறுத்தினார். (அ)

## 25 மாவட்டங்களைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு இந்திய அரசின் மகாத்மா காந்தி புலமைப்பரிசில்

கொழும்பு, பெப். 11

நாட்டில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு, இந்திய அரசின் மகாத்மா காந்தி புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு மாதந்தம் 2,500 ரூபாய் வழங்கப்படுமென இந்திய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை தவிர பொறியியல், தொழில்நுட்பம், கலை, அறிவியல் மற்றும் உள்நாட்டு மருத்துவம் போன்ற துறைகளை சார்ந்தவர்களுக்கும் இந்திய அரசு உதவித்தொகைகளை வழங்குவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## டெங்கு காய்ச்சல் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, பெப். 11

தென்மேற்கு பருவமழை ஆரம்பமாகியுள்ள நிலையில், நாட்டில் டெங்கு காய்ச்சல் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பதில் பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, நாடு முழுவதும் 9,480 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 51.3 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிக ளிலும் பாதிப்புகள் அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## விமான நிலையத்தில் ஈரான் பிரஜை கைது!

கொழும்பு, பெப். 11

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் ஈரான் நாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 45 வயதுடைய ஈரான் நாட்டு பிரஜை ஒருவர் ஆவார்.

சந்தேக நபரான ஈரான் நாட்டு பிரஜை சாஜாவிலிருந்து நேற்று அதிகாலை 04.24 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.


இதன்போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபரான ஈரான் நாட்டு பிரஜை கொண்டு வந்த பயணப்பொதிகளில் இருந்து 36,860 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளின் மொத்த பெறுமதி 55 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். ரகசியங்களை வெளியிட வேண்டாம். சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். பொறுமைத் தேவைப்படும்.

**இடபம்**
எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள். திறமை தேவை.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். வேலை களை யும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை றியடிப்பீர்கள். நன்மை நடக்கும்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் கவலைகள் வந்து போகும். உயரதிகாரிகளுக்கு வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். உறவினருடன் பகை வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். புகழ் கூடும்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# “அரசியல் இருப்புக்காக சட்டவிரோத கடற்றொழிலை ஆதரிக்கிறார் சஜித்”

யாழ்ப்பாணம், பெப். 11

அநுர அரசாங்கத்தால் சட்டவிரோத கரைவலை தொழில் நிறுத்தப்பட்டமைக்கு எதிராக போராடுபவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இணைந்து குரல் கொடுப்பது அவரது அரசியல் இருப்பை தக்கவைக்க எடுக்கும் முயற்சியாகும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் உறுப்பினர் அன்னலிங்கம் அன்னராசா குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த வாரம் முதல் சட்டவிரோத கரைவலை தொழிலை நிறுத்தியமைக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம் ஒன்று இடம்பெற்று வருகிறது.

இந்த போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டார்.

சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு ஆதரவாக சஜித் பிரேமதாஸ போராட்டத்தில் கலந்து கொண்டதை வடபகுதி மீனவர்கள் சார்பில் கண்டிக்கின்றோம்.

இது அவரின் வங்குரோத்து அரசியலை எடுத்துக்காட்டுகிறது.”-என்றார். (எ-03)

# போக்குவரத்துக்கு இடையூறாக திரிந்த 65 மாடுகள் பிரதேச சபையால் பிடிப்பு

## புதுக்குடியிருப்பில் அதிரடி நடவடிக்கை

முல்லைத்தீவு, பெப். 11

போக்குவரத்துக்கும் பொது மக்களின் பாதுகாப்புக்கும் இடையூறாக வீதிகளில் அலைந்து திரிந்த கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நோக்கில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் ஞாயிற்றுக்கிழமை இரவு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அண்மைய நாட்களில் இரவு நேரங்களில் வீதிகளில் நிற்கும் கால்நடைகளால் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. இதனைத் தடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபை, பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகளில் கால்நடைகளை பிடிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

இந்த நடவடிக்கையின் போது மாடு, கன்றுகள் என மொத்தமாக 65 மாடுகள் பிடிக்கப்பட்டன. அவை தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன. (எ)

# மன்னார் - கரிசலில் புதிய பள்ளிவாசல் நேரில் பார்வையிட்டார் ரிஷாத் பதியுதீன்



மன்னார், பெப். 11

மன்னார் மாவட்டத்தின் கரிசல் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளிவாசலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேரில் சென்று பார்வையிட்டார்.

சமூக நலன் மற்றும் இறை சேவையை முதன்மையாக கொண்டு, பள்ளிவாசல் மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (எ)

# மன்னார் கடல் கொந்தளிக்கும்

கொழும்பு, பெப். 11

களுத்துறை தொடக்கம் கொழும்பு, புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 - 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும். இதேவேளை, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோர்கள் தாம் முதலில் நல்வழியில் செல்ல வேண்டும்

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 11

பெற்றோர்களுக்குத் தற்போதைய சூழலில் பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சவாலாக உள்ளது. தங்கள் பிள்ளைகள் கெட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக “அதைச் செய்யாதே இதைச் செய்யாதே” என்று தினமும் அறிவுரைகளால் பிள்ளைகளை வழிநடத்த முயலுகிறார்கள். ஆனால், இன்றைய பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்லுவதையல்ல, செய்வதையே செய்கிறார்கள்.

பிள்ளைகளை நல்வழி நடக்கக்கோரும் பெற்றோர்கள் சொல்லால் அல்ல் செயலால் காட்ட வேண்டும். முதலில் தாங்கள் அவ்வழியில் சென்று காட்ட வேண்டும். பெற்றோர்கள் எவ்வழியோ, பிள்ளைகளும் அவ்வழியிலேயே என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசுமை இயக்கத்தின் மாணவர்களை வலுவூட்டும் “பசுமை அறிவொளி” நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. நூற்றுக் கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி உரையாற்றிய போதே ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை மறந்து மக்களின் போராட்டங்களை ஒடுக்கும் அரசு!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 11

தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகச் செயல்படுவதோடு, மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை அடக்கு முறை மூலம் ஒடுக்கி வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



தமது கோரிக்கைகளை வென்றெடுக்க மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தேவையில்லை எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், இன்று மக்களை ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் வந்து போராடும் நிலைக்குத் தள்ளிவிட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தற்போதைய அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கினால் முடக்கப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் போராட்டங்களுக்காகத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அன்று போராட்டக்காரர்கள் பல மாதங்களாக அங்கேயே தங்கியிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இன்று மழையில் நனையும் போராட்டக்காரர்களுக்குக் கூட பொலிஸார் இடமளிக்க மறுப்பது அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற போக்கைக் காட்டுகிறது.

அரசு எதிர்கட்சியினர் மீது பழியைப் போட்டுத் தப்பிக்க முயலாமல், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

# கோரிக்கை நிறைவேற்றாது மின்சார சபையை கலைத்தால் பெரும் தொழிற்சங்க நடவடிக்கை!

## தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 11

தமது கோரிக்கைகளை நிறைவேற்றாது, இலங்கை மின்சார சபையைக் கலைப்பதற்கான திகதியை வர்த்தமானி மூலம் அறிவித்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக மின்சார சபை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மின்சார சபையின் 24 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளின் கையொப்பத்துடன் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 8 கோரிக்கைகளை உள்ளடக்கிய கடிதம் ஒன்று கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களினால் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், குறித்த கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கப்பெறாத நிலையில், மீண்டும் அக்கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு கோரி அமைச்சருக்கு மற்றுமொரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளதால், அவற்றை வென்றெடுப்பதற்காக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர ஊழியர்களுக்கு வேறு வழியில்லை என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# 27ஆவது கூட்டு ஆணைய சந்திப்பை கொழும்பில் நாளை நடத்தும் இலங்கை-ஐரோப்பிய ஒன்றியம்!

கொழும்பு, பெப். 11

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணையகத்தின் 27 ஆவது அமர்வை நாளை கொழும்பில் நடத்தவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உயர்மட்ட சந்திப்பானது, நிர்வாகம், மனித உரிமைகள், வர்த்தகம், அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் ஏனைய இருதரப்பு மற்றும் பிராந்திய முன்னுரிமைகள் உள்ளிட்ட பல துறைகளில் கூட்டாண்மையை மீளாய்வு செய்து, வலுப்படுத்தும்பொருட்டு இரு தரப்பிலிருந்தும் சிரேஷ்ட அதிகாரிகளை ஒன்றிணைப்பதாக அமையும்.

கூட்டு ஆணையகத்துக்கு இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி அருணி ரணராஜ மற்றும் ஐரோப்பிய வெளிவாரி நடவடிக்கை சேவையின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பதிற்கடமை முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பாவோலா பம்பலோனி ஆகியோர் இணைத் தலைமை தாங்கவுள்ளனர்.

வருகை தரவுள்ள ஐரோப்பிய ஒன்றியக் குழு, இலங்கையின் சிரேஷ்ட பிரமுகர்களைச் சந்தித்து, தற்போதைய கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான கூட்டு அணுகுமுறைகள் மற்றும் உறுதியான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

கொழும்பு, பெப். 11

தம்புள்ளை - ஹபரணை பிரதான வீதியிலுள்ள திகம்பதஹ பகுதியில் வேன் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதோடு, வானின் சாரதி காயமடைந்து தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சிகிரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இவ் விபத்தில் உயிரிழந்தவர்கள் 18 மற்றும் 20 வயதான, தம்புள்ளை மற்றும் தனமல்வில பகுதியில் வசிப்பவர்கள்.

அவர்கள் திகம்பதஹ பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியில் பணிபுரிந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை மீனவர்கள் மீது தாக்குதல் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 11

சர்வதேச கடல் பரப்பில் வைத்து அடையாளம் தெரியாத குழுவினரால் இலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து, பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான அறிக்கை மீன்பிடி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் மீன்பிடி பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து தாம் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட இரண்டு மீனவர்கள், கடந்த கடந்த 4 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேபோன்றதொரு சம்பவத்தில், ஏற்கனவே தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் "தினிதி துவா 01" படகின் மீனவர்கள் காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இத்தாக்குதல்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய கடலோர காவற்படையினரோ அல்லது இந்திய கடற்படையினரோ இலங்கை மீனவர்கள் மீது எவ்வித தாக்குதலையும் நடத்தவில்லை என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகளை சிறையில் அடைக்காதே! திருமலை நீதிமன்றம் முன் பதற்றம்


திருகோணமலை, பெப். 11

திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பலாங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட 11 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டதை தொடர்ந்து, திருகோணமலை நீதிவான் நீதிமன்ற வளாகத்தின் முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை பெரும் பதற்றம் நிலவியது.

கைது செய்யப்பட்ட பலாங்கொட கஸ்ஸப தேரர் மற்றும் கல்யாணவன்ச திஸ்ஸ தேரர் உள்ளிட்ட 4 பிக்குகளும் 7 பொது மக்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, இவர்களது விளக்கமறியலை நீடித்து நீதிவான் உத்தரவிட்டதையடுத்து, சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களை பேருந்தை நோக்கி கொண்டு சென்றனர். இதன்போது, சந்தேகநபர் ஒருவரை சிறைச்சாலை அதிகாரி பலவந்தமாக பிடித்து பேருந்துக்குள் தள்ளியதாக கூறி, அங்கு கூடியிருந்த பிக்குகளும் பொது மக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தற்போதைய அரசாங்கம் இனவாதத்தை தூண்டி, பௌத்த கலாசாரத்தை பாதுகாக்க முன்னின்று உழைக்கும் தேரர்களை சிறையில் அடைப்பதாக குற்றம் சாட்டிய போராட்டக்காரர்கள், அரசாங்கத்தின் இந்தச் செயல்பாடு பௌத்த சாசனத்துக்கு இழைக்கப்படும் பெரும் அநீதி என்று கூறினர். இந்தத் திடீர் போராட்டத்தால் நீதிமன்றச் சூழலில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (எ)

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு செயல்திட்டம்



நுவரெலியா, பெப். 11

இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்பை ஒரு தேசிய இயக்கமாக முன்னெடுக்கும் வகையில், "அகன்று செல்" எனும் தொனிப்பொருளில் விசேட விழிப்புணர்வு செயல்திட்டம் நேற்று முன்தினம் நுவரெலியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


நாட்டில் பரவலாக உள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கத்துடன் "போதைப்பொருள் அற்ற நாடு - மகிழ்ச்சியான நாளை" என்ற தொனிப்பொருளின் கீழ் "அகன்று செல்-முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் நுவரெலியாவில் பொது மக்கள் அதிகம் கூடும் இடமாக இருக்கும் நுவரெலியா பிரதான அஞ்சல் நிலைய வளாகம் மற்றும் பிரதான பேருந்து தரிப்பிட வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நுவரெலியா பொலிஸ் உயர் அதிகாரிகள் தலைமை தாங்கி, ஓட்டோக்கள் மற்றும் பிற வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை ஒட்டி இந்தத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது, மூன்று மொழிகள் அடங்கிய போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்பு மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட வேலைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிராக சமூகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பன்முக அணுகுமுறை அடங்கிய சுவரொட்டிகளையும் விநியோகம் செய்தனர்.

இந்தச் செயல்திட்டத்தின் முக்கிய தொனிப்பொருளாக "அகன்று செல்" - போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையிலிருந்து சமூகத்தை விடுவிப்பதை இது குறிக்கிறது. (எ)

# பாடசாலை மருத்துவ பரிசோதனை திட்டம்



சாய்ந்தமருது, பெப். 11

அம்பாறை மாவட்டம், சாய்ந்டிதமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் செயல்படும் எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் தரம்- 1, தரம்- 4 மற்றும் தரம்- 7 மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலை மருத்துவ பரிசோதனை திட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் இந்த மருத்துவ பரிசோதனை நடைபெற்றது. இதில், மாணவர்களின் உடற்திணிவு, வாய்ச்சுகாதாரம், இருதயம் சம்பந்தமான குறைபாடுகள், தோல் நோய்கள், பேச்சுத் திறன், கேட்கும் திறன், விசேட நடத்தைகள், நுரையீரல் நிலை மற்றும் கண் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவ பரிசோதனைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை பற் சிகிச்சையாளர் மற்றும் நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் ஆகியோர் பங்கேற்று, தங்களது சேவைகளை வழங்கினர். (எ-06)

# சிறுத்தையின் சடலம் மீட்பு

நுவரெலியா, பெப். 11

பொகவந்தலாவ- கொட்டியாகலை மேல் பிரிவு 05ஆம் இலக்க தேயிலை மலையில் பன்றிக்கு விரிக்கப்பட்டிருந்த வலையில் சிறுத்தை சிக்குண்டு உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

சிறுத்தையின் சடலத்தை இனங்கண்ட தோட்ட பொது மக்கள் பொகவந்தலாவ பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிஸார், வனவிலங்குதுறை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினர். குறித்த சிறுத்தை உணவு தேடி வந்து இவ்வாறு வலையில் சிக்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பி வலை விரித்த சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தோடு சிறுத்தையின் சடலம் ரந்தெனிகல மிருக மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது என்று வனவிலங்குதுறை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# 10 வாகனங்களுக்கு காலக்கெடு: திடீர் சோதனையில் நடவடிக்கை

நுவரெலியா, பெப். 11

ஹற்றன் பிரதேசத்தில் நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட திடீர் வாகனச் சோதனையின்போது 10 வாகனங்களுக்கு உடனடியாக திருத்தம் செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவற்றின் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட தலைமை மோட்டார் வாகன பரிசோதகர் ஜாலிய பண்டார தலைமையின் கீழ், ஹற்றன் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்தச் சோதனையில் ஹற்றன் மல்லியப்பூ சந்தி வழியாக பிரதான வீதியூடாக பயணிக்கும் நீண்ட மற்றும் குறுகிய தூரப் பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்கள் உட்பட 15 வாகனங்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், 2 தனியார் பேருந்துகள், 01 இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து, 02 ஓட்டோக்கள், 02 லொறிகள் மற்றும் 02 எரிபொருள் போக்குவரத்து பௌசர்கள் உட்பட 10 வாகனங்களின் வருவாய் உரிமங்கள் மற்றும் வாகன ஆவணங்களை மோட்டார் வாகன ஆய்வாளரால் தடுத்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வழங்கப்பட்டுள்ள 14 நாட்களுக்குள் வாகனங்களை சீர் செய்து நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பரிசோதகர் காரியாலயத்தில் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் அதன் பின்னரே தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகன வருவாய் பத்திரம் மற்றும் வாகன ஆவணங்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் வாகன உரிமையாளர்களுக்கு நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரதான பரிசோதகர் ஜாலிய பண்டார தெரிவித்தார். (எ)

# கல்முனையில் திடீர் சோதனை: 50 பேர் மீது சட்ட நடவடிக்கை

கல்முனை, பெப். 11

சட்டவிரோத போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் முகமாக கிளின் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் பொலிஸாரின் விசேட திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 50 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சோதனை நடவடிக்கையானது திங்கட்கிழமை இரவு கல்முனை பிரதான பேருந்து நிலையத்தின் முன்பாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் ஆலோசனையின் கீழ் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி நெறிப்படுத்தலில் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் கல்முனை, சவளைக்கடை பொலிஸ் நிலைய பொலிஸார் இணைந்து கொண்டதுடன் சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் பங்கேற்றனர்.

குறிப்பாக இந்தச் சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிள்கள் உட்பட கனரக வாகனங்கள் கட்டம்கட்டமாக பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன. அத்துடன், வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரால் வழங்கப்பட்டன. (எ-01)

# "தோட்ட தொழிலாளர்களின் சுமை அதிகரிக்கக் கூடாது"

ஹற்றன், பெப். 11

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கிடைக்கப் பெறுவது எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால், அவர்களுக்கு தொழில் சுமை அதிகரிக்கக் கூடாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரமும் தெரிவித்தனர்.

தற்போது தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு 1,750 ரூபாய் சம்பளத்தை வழங்க வேண்டுமானால், ஒரு நாளைக்கு பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவை 20 கிலோவிலிருந்து 25 கிலோவாக உயர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிபந்தனையால் தொழிலாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக பல தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதற்கு தயக்கம் காட்டியும் வருகின்றனர் எனவும் ஹற்றனில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

மேலும், தோட்ட முகாமையாளரால் பணிநீக்கம் செய்யப்பட்ட, கவரவலை தோட்டத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரக போராட்டம் தொடர்பில், ஹற்றன் பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி காரியாலயத்தில், பேச்சுவார்த்தை ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்...

வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஹைஏஸ் வாகனத்தைச் செலுத்திய வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அல்பினோ அருள்பயாஸ் என்ற சிறுவனே உயிரிழந்தார்.

பொலிஸ் அறிக்கை, பொலிஸார் தெரிவித்த கருத்துகள் ஊடாக இந்தச் சம்பவம் தொடர்பில் அறிய வந்தவை வருமாறு,

நேற்று அதிகாலை அல்லைப்பிட்டி பொலிஸ் சோதனை சாவடி வழியாக பயணித்த ஹைஏஸ் வாகனத்தை அங்கு நின்ற பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட மறித்துள்ளனர். ஆனால், வான் கட்டளையை மீறித் தடையை மோதித்தள்ளவிட்டு சென்றுள்ளது.

இதையடுத்து, ஹைஏஸ் வானை மண்டைதீவு சோதனை சாவடியில் மறிக்குமாறு அறிவிக்கப்பட்டது. இதேசமயம், மண்டைதீவு சோதனை சாவடியை பரிசோதித்துவிட்டு அல்லைப்பிட்டி நோக்கிப் பயணித்த ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஜீப் வாகனத்துக்கும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அந்த ஜீப்பும் ஹைஏஸ் வானை நிறுத்த முயன்றது. ஆனால், வான் தொடர்ந்து ஓடியது. இதனால், பொலிஸார் ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வெடி வைத்தனர். எனினும், ஹைஏஸ் வான் நிற்காமல் தொடர்ந்து பயணித்த நிலையில் வான்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், ஹைஏஸ் வானின் பின் இருக்கைகள் கழற்றி அகற்றப்பட்டிருந்தன என்றும் அந்த வாகனத்தில் இருந்த இருவரை கைது செய்ததுடன், இரு நைலோன் கயிறுகளும் பை ஒன்றில் மாட்டுச்சாணமும் எடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றவியல் பொலிஸ் பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. (ஐ)

## நெற்றி...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடற்கூராய்வு பரிசோதனை யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி எம். மயூரதன் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றிருந்தது.

## அல்லைப்பிட்டி...

பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "வாகனத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்படுவதற்கு முன்னர் வானத்தை நோக்கி பல தடவைகள் சூடு நடத்தப்பட்டுள்ளது. அந்த எச்சரிக்கையையும் மீறியதாலேயே அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாரும் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்." - என்றார். (ஐ)

## துப்பாக்கியுடன்...

எனினும், சந்தேகந பரை பொலிஸார் கைது செய்த நிலையில் அவர் கொண்டு வந்தது போலி துப்பாக்கி என்று தெரிய வந்தது.

இந்தச்சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை வருமாறு,

நேற்றைய தினம் மருதனார்மடம் சந்தைக்கு தலைக்கவசம், கையுறைகள் அணிந்தவாறு பை ஒன்றுடன் வந்த ஒருவர் அங்கிருந்த வியாபாரியிடம் பச்சை மிளகாயை கொள்வனவு செய்துள்ளார். அத்துடன் அவரிடம் "சந்தைக்குள் வட்டிக்கு பணம் வழங்குபவர்கள் யார்?" என்று வினாவியுள்ளார். அதற்கு வியாபாரி தனக்கு தெரியாது என கூறியதும் அவர் அங்கிருந்து சென்றுள்ளார்.

சந்தேகநபர் கொண்டுவந்திருந்த பைக்குள் ரி -56 ரக துப்பாக்கி காணப்பட்டதாகவும் அவரின் இடுப்பு பகுதியில் கைத்துப்பாக்கி ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தமை போன்ற தோற்றம் இருந்ததாகவும் சுன்னாகம் பொலிஸாருக்கு சந்தை வியாபாரிகள் அறிவித்தனர்.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார், சந்தையில் இருந்த கண்காணிப்பு கமெரா பதிவுகளை சோதனையிட்டு துப்பாக்கியுடன் வந்தவர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர். விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்த துப்பாக்கிகளையும் பறிமுதல் செய்தனர். ஆனால், சோதனையில் அவை போலி துப்பாக்கிகள் என்றும் சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தது. (ஐ)

## புலிகளின்...

மக்கள். அவர்கள் அந்த மண்ணை எடுத்து சென்றதால் ஏற்பட்ட கோபத்தில், அந்த வீட்டை இலங்கை இராணுவம் முற்றாக இடித்து அகற்றி வெறும் மணல் தரையாக மாற்றினர்.

இதன்படி தலைவர் பிரபாகரனின் அடையாளம் முழுமையாக அழிக்கப்பட வேண்டும் என்பதற்காக இலங்கை படையும் அரசாங்கமும் செயல்படுகின்றனவா என்ற கேள்வியும் எழுகிறது. மக்களின் கருத்துகளுக்கு இடம் கொடுக்கும் வகையில் உலகத்தலைவர்கள் பலரின் வீடுகள் நினைவுச்சின்னங்களாக மாற்றப்பட்டமைபோல தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டையும் அருங்காட்சியகமாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். எனினும், அதில் கட்டப்படுவதாக கூறப்படும் நூலகத்துக்கு எந்த தடையும் இல்லை. அதில் தலைவர் பிரபாகரனின் வீட்டின் மாதிரியையும் அவரின் பெற்றோர்களின் திருவுருவச்சிலைகளையும் நிறுவ வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துள்ளோம். இந்த விடயம் தொடர்பில் பிரபாகரனின் சகோதரிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளோம்"- என்றார். (ஐ)

## ஊழலற்ற நாடுகள்...

கடந்த ஆண்டு 14 இடங்கள் முன்னேறியிருந்தாலும் அதன் மொத்தப் புள்ளியான 35 என்பது உலகளாவிய சராசரி புள்ளியான 43ஐ விடக் குறைவாகவே உள்ளது. இதன்மூலம், இலங்கையில் இன்னும் நிர்வாகப் பொறுப்புக்கூறல் மற்றும் ஊழலை முழுமையாக கட்டுப்படுத்துவதில் சவால்கள் இருப்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்தப் பட்டியலில் டென்மார்க் (89 புள்ளிகள்) தொடர்ந்து 8ஆவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. பின்லாந்து (88) மற்றும் சிங்கப்பூர் (84) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. தெற்காசியாவில் இந்தியா, மாலைத்தீவு போன்ற நாடுகள் இலங்கையை விட முன்னிலையில் இருந்தாலும், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவை பின்தங்கியுள்ளன. (ஐ)

## கிவுல்...

தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மக்களின் நீர் பிரச்னைக்கு தீர்வைவழங்குவதற்காகவும் குறிப்பாக விவசாய நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனத்தை வழங்குவதற்கானதுமான அத்தியாவசிய வேலைத்திட்டமாகவே இந்த கிவுல் ஓயா திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால், இது எமது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் அல்ல.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பரில்அப்போதைய அமைச்சரவை குறித்த கிவுல் ஓயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தது. இதற்காக அந்தக் காலப்பகுதியில் 417 கோடி ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டிருந்தது. இது மகாவலி எல் வலயத்துக்குள்ளேயே காணப்படுகிறது. 4 ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அந்தத் திட்டம் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. கோவிட் தொற்று, அதன் பின்னரான பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட காரணிகளால் இந்தத் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் அத்தியாவசியமானது என்று இனங்காணப்பட்ட வேலைத்திட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதற்கமைய தேசிய நிதியத்தின் ஊடாக 2026 - 2031ஆம் ஆண்டு வரை இந்த திட்டத்தை முன்னெடுத்து அதனை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறிருப்பினும், இந்தத் திட்ட செலவும் அது 2 ஆயிரத்து 345 கோடி ரூபாய் வரை அதிகரித்துள்ளது. ஆரம்பிக்கப்பட்ட போது மதிப்பிடப்பட்ட தொகையை விட 6 மடங்கு செலவு அதிகரித்துள்ளது.

இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இனத்தை அடிப்படையாகக் கொண்டு எவருக்கும் நீர் வழங்கப்படுவதில்லை. எனவே, இதனை அரசியல் மயமாக்கி வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த திட்டத்தை முன்னெடுப்பதில் அரசாங்கத்துக்கு வேறு எந்த நோக்கமும் கிடையாது - என்றார். (ஐ)

## 10 கோடி...

டொலர்கள் நிதி எமது நாட்டுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 10 கோடி டொலர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிராந்திய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்குப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வலய ரீதியான உற்பத்தி ஆற்றல் வளங்களை (சுற்றுலா, மீன்பிடி போன்ற) அதிகரித்தல், தொழில் வாய்ப்புகளை உருவாக்கல், தனியார் மூதலீடுகளை கவர்ந்திழுத்தல் மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்துகின்ற கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## பணம்...

மேலும் தெரிவிக்கையில்,

"நாம் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக செய்து வருகிறோம். திருட்டு, கொள்ளை, மோசடிகளை இல்லாது ஒழிப்பதாக அரசியல் ரீதியாக தெரிவித்திருந்தோம். இவ்வாறான மோசடிகளில் நூறு வீதம் அரசோ, அரச அமைச்சர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ ஈடுபடவில்லை.

இந்த வீதி, 550 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்து கேள்வி கோரல் பத்திரம் தாக்கல் செய்திருந்தோம். குறித்த ஒப்பந்தத்தை 385 இலட்சம் ரூபாய்க்கு ஓர் ஒப்பந்தகாரர் எடுத்துள்ளார். இதன் மூலமாக 165 இலட்சம் ரூபாய் மீதப்படுத்தியுள்ளோம். மொட்டுக் கட்சி அரசோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கமாக இருந்திருந்தால் இந்த 165 இலட்சம் ரூபாயும் பைகளுக்குள்சென்றிருக்கும். இதேபோன்று வடக்கு மாகாண சபையிலும் பெரிய மாற்றம் இல்லை. குறிப்பாக கடந்த மாகாண சபையிலே அமைச்சர்கள் இருவரை வட மாகாண முதலமைச்சர் நீக்கியிருந்தார்.

இனவாதம் இல்லாத அரசை உருவாக்குவோம் என ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார். நீங்கள் தமிழர் என்பதால் இந்த அரசாங்கத்தால்அநீதி இழைக்கப்பட்டு உள்ளதா என்று கேட்கிறேன். பல வருட காலமாக இந்நாட்டிலே பிரச்னை ஒன்று இருக்கிறது என்று எங்களுக்கு தெரியும். அதனை தீர்த்து வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. பெரும்பாலான பிரச்னைகள் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்ற ரீதியில் இல்லை. குறிப்பாக பணம் இருந்தால் மூவினத்தவர்களும் சந்தோசமாக உள்ளனர். ஆனால், பணம் இல்லை எனின் இது கஷ்டமாகும்.

கல்வி சீர்திருத்தம் தொடர்பாக தெரிவித்திருந்தோம். அதனை தற்போது ஆரம்பித்துள்ளோம். இங்குள்ள ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலைக்கு செல்லவில்லையோ என தோன்றுகிறது. குறிப்பாக தமிழ் அரசுக் கட்சியில் ஒருவரே அப்படி இருக்கின்றார், மற்றவர்கள் கொஞ்சம் பரவாயில்லை. நாம் மேற்கொண்ட கல்வி சீர்திருத்த விடயத்தில் இவர்கள் மேற்கொண்ட செயலால் தரம் 06இற்கான வகுப்பை இந்த வருடம் ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது. வடக்கு மாகாணத்தில் படையினர் மற்றும் அரசின் கீழ் உள்ள காணிகளை தேவையின் அடிப்படையில் படையினரின் சம்மதத்துடன் மீளவும் பொதுமக்களுக்கு வழங்கவுள்ளோம்.

அதிகளவான மக்கள் எங்கள் அரசின் மீது ஆர்வமாக உள்ளனர். ஆனால் இந்த அரசை யார் எதிர்க்கின்றனர். குறிப்பாக கடந்த காலத்தை போல் சௌகரியமாக இருக்க முடியாத ராஜபக்ஷக்கள், ஐக்கிய மக்கள் சக்தியினரே. குறிப்பாக ஒரு குடும்பமே ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள் அது தற்போது முடியாதுள்ளது. தெற்கில் இனவாதம் இல்லையெனில் வடக்கிலும் இனவாதம் இருக்காது. ராஜபக்ஷ சரியான பசியுடன் உள்ளார். அவர்களுக்கு இனவாத உணவு இல்லை. கம்மன்பில, வீரவன்ஸ ஆகியோருக்கு இனவாத உணவு இல்லாமல் மெலிந்துள்ளனர்.

அமைச்சு பதவி இன்றி வாக்குகள் இன்றி தற்போது இவர்கள் இனவாதம் எங்குள்ளது என தேடுகின்றனர். இவர்களை போன்றவர்களே யாழிலும் உள்ளனர். அத்துடன், அவர்களுக்கு அமைச்சு பதவி இல்லாமல் போய்விட்டது. அத்தோடு வடக்கில் உள்ள இவர்களும் இனவாதத்தைத் தேடி திரிகின்றனர். ஆனால் நாங்கள் அவர்களுக்கு இனவாத உணவை வழங்கப்போவது இல்லை - என்றார். (ஐ)

## அரிவுவெட்டவே...

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிறுவனின் சிறிய தாயார் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "உயிரிழந்தவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதபோதிலும் வாகனம் ஓட்டுவதையே தொழிலாக செய்து வந்தார். பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்கியே அவர் வாகனத்தை செலுத்திவந்தார். அரிவு வெட்டுக்காக வேலணையில் வேலையாட்களை ஏற்றச் சென்றபோது அவரிடம் பணம் இல்லாததால்தான் பொலிஸார் மறித்தபோது தொடர்ந்து வாகனத்தை செலுத்தியுள்ளார். இதனாலேயே அவரை பொலிஸார் சுட்டனர். அவருடன் சென்ற மற்றைய இருவரும் நெருங்கிய உறவினர்களே. குடும்ப கஷ்டத்தால் 17 வயதிலேயே உழைக்கச் சென்றான். அவனை அநியாயமாக சுட்டுக் கொன்றுவிட்டார்கள்" - என்று கண்ணீர் மல்க தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# குஜராத் முதலமைச்சரை சந்தித்தார் ரில்வின் சில்வா!

**இந்திய ஒத்துழைப்பு குறித்து பேச்சு**

கொழும்பு, பெப். 11

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் பூபேந்திர ரஜினிகாந்த் படேல் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்திய கலாசார உறவுகளுக்கான சபையின் அழைப்பின் பேரில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட குழு இந்தியாவுக்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டது.

இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது குஜராத் மாநிலத்தின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது.



அத்துடன் இலங்கையின் கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஆடை உற்பத்தித் துறைகளின் மேம்பாட்டுக்காக இணைந்து செயற்படுவது குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

குஜராத் மாநிலத்தின் தலையீட்டில் புத்தரின் புனித சின்னங்கள் மக்கள் தரிசனத்திற்காக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டமைக்கும், "டித்வா" சூறாவளி அனர்த்தத்தின் போது இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்கும் ரில்வின் சில்வா தனது நன்றிகளைத் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை கூடியது

கொழும்பு, பெப். 11

ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

இந்த நிர்வாக சபையானது, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 7 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

இந்தக்கலந்துரையாடலில் பிரதமர் ஹறிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் சந்திர சிறி மாயாதுன்ன மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

## பல்கலைகளில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கு வசதிகள் விரிவாக்கம்

கொழும்பு, பெப். 11

இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கும், அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பாகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன கருத்துத் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் விசேட தேவையுடைய மாணவர்களைத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சங்கீதம் போன்ற பாடத்துறைகளில் இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது ஒரு சில பல்கலைக்கழகங்களில் மாத்திரமே இம்மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வரும் நிலையில், இனிவரும் காலங்களில் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இம்மாணவர்களுக்குத் தேவையான வசதிகளுடன் தயார்ப்படுத்தப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் ஆணைக்குழு அவதானம் செலுத்தி வருவதோடு இதற்கென 1.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியானது பல்கலைக்கழகங்களின் வதிவிட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும்-என்றார். (அ)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளராக ஷனொன் கௌலின்!

கொழும்பு, பெப். 11

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய வதிவிடப் பணிப்பாளராக ஷனொன் கௌலின் கொழும்பில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கையின் நீண்டகால மற்றும் நம்பிக்கைக்குரிய பங்காளியாகத் திகழும் ஆசிய அபிவிருத்தி வங்கி, கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளின் போது நாட்டுக்கு வழங்கிய ஆதரவை கௌலின் தனது உரையில் நினைவு கூர்ந்தார்.




"டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைப்பதற்கும், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி அதன் நெகிழ்ச்சித் தன்மையை வலுப்படுத்துவதற்கும் தாம் அரசாங்கத்துடனும் அபிவிருத்திப் பங்காளர்களுடனும் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றப் போவதாக அவர் உறுதியளித்தார்.

ஷனொன் கௌலின் சுமார் 26 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச தொழில்முறை அனுபவம் கொண்டவர். இதில் 13 ஆண்டுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

இலங்கைக்கு வருவதற்கு முன்னர், 2023 ஆம் ஆண்டு முதல் மங்கோலியாவுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பணிப்பாளராகப் பணியாற்றி அந்த நாட்டின் மூலோபாய நடவடிக்கைகளை வழிநடத்தினார். (அ)

## 2026 இன் முதல் சூரிய கிரகணம் எதிர்வரும் 17 ஆம் திகதி நிகழும்!

கொழும்பு, பெப். 11

2026 ஆம் ஆண்டின் முதலாவது பகுதி அளவு சூரிய கிரகணம் எதிர்வரும் 17 ஆம் திகதி நிகழவுள்ளதாக வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அபூர்வ நிகழ்வானது அன்றைய தினம் பிற்பகல் 3.26 மணிக்கு ஆரம்பமாகி, இரவு 7.57 மணி வரை நீடிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக இந்த வானியல் நிகழ்வு நீடிக்கவுள்ளது.

சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் கடந்து செல்லும்போது, சூரியனின் மையப்பகுதியை சந்திரன் மறைப்பதன் காரணமாக, சூரியன் ஒரு ஒளிவட்டம் போன்று காட்சியளிக்கும்.

இது ஒரு பகுதி அளவு சூரிய கிரகணமாக அமைவதால், சூரியனின் ஓரப்பகுதிகள் பிரகாசமான வளையமாகத் தென்படும்.

இந்த சூரிய கிரகணத்தை உலகின் பல நாடுகளில் அவதானிக்க முடிந்தாலும், இந்தியாவில் இதனைப் பார்க்க முடியாது என வானியல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## பாகிஸ்தான் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார் அநுர!

கொழும்பு, பெப். 11

இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான பரபரப்பான லீக் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாகிஸ்தான் பிரதமருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் எக்ஸ் தளப் பதிவில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பதிவில் "எல்லோரும் நேசிக்கும் கிரிக்கெட் விளையாட்டு தடையின்றித் தொடர்வதை உறுதி செய்ததற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப்பிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொழும்பில் நடைபெறவுள்ள இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும் என்பதில் மிக்க மகிழ்ச்சி."

இந்தத் தொடரை இணைந்து நடத்தும் நாடு என்ற ரீதியில், ஐ.சி.சி. மற்றும் இதற்காக முயற்சி எடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

மேலும், 1996 ஆம் ஆண்டு இலங்கையில் நிலவிய பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மற்ற நாடுகள் வர மறுத்தபோது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கொழும்புக்கு வந்து விளையாடி காட்டிய ஒற்றுமையை இலங்கை என்றும் மறக்காது என்பதையும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக, பங்களாதேஷ் அணி நீக்கப்பட்டதற்கு ஆதரவாக, இந்தியாவுடனான போட்டியைப் புறக்கணிப்பதாகப் பாகிஸ்தான் அறிவித்திருந்தது.

ஆனால், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் உருக்கமான வேண்டுகோள்களை ஏற்றுப் பாகிஸ்தான் அரசு தனது முடிவைத் திரும்பப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

சாதாரண தரப் பரீட்சை;

# மேலதிக வகுப்புகள் நடத்த இன்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, பெப். 11

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்புடைய அனைத்து மேலதிக வகுப்புகளும் இன்று நள்ளிரவு முதல் தடை செய்யப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை நிறைவடையும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும். பாடங்கள் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அனைத்து விதமான விளம்பர நடவடிக்கைகளுக்கும் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ, 119 என்ற காவல்துறையின் அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாகவோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 என்ற துரித அழைப்பு இலக்கத்தின் ஊடாகவோ வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திகா லியனகே தெரிவித்துள்ளார்.

அதன்படி இம்முறை 382,249 பாடசாலை பரீட்சாத்திகளும் 69,214 தனியார் பரீட்சாத்திகளும் என மொத்தம் 451,463 பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையானது நாடு முழுவதும் உள்ள 3,545 நிலையங்களில் பெப்ரவரி 17 முதல் பெப்ரவரி 26 வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.